# உதவி அமர்வு நீதிபதி மற்றும் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.

முன்னிலை :– திருமதி.J.கிறிஸ்டல் பபிதா எம்.எஸ்.சி., எம்.எல்.,
உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் சனிக் கிழமை

**S.C.No. 749/ 2023**

C.N.R.No.TNTS 02-000073-2023

(அம்பாசமுத்திரம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின்
முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். 15 /2023)
(ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய குற்ற எண். 183/ 2022)

| | | |
|---|---|---|
| அரசுக்காக :<br>காவல் ஆய்வாளர்,<br>ஆழ்வார்குறிச்சி காவல் நிலையம். | : | ... குற்ற முறையிடுபவர் |
| | : | எதிரிகள்:–<br>1) அண்ணாமலை, வயது 38/22<br>த.பெ. அன்னகொடி,<br>ராமசாமி கோவில் தெரு,<br>கழுநீர்குளம்.<br>2) வேலுச்சாமி (எ) கண்ணன், வயது 36/22<br>த.பெ. முப்புடாதி,<br>220/1 நேதாஜி தெரு,<br>கழுநீர்குளம்,<br>ஆலங்குளம்.<br>3) மாணிக்கம் (எ) முத்துகுமார், வயது 33/22<br>த.பெ. உச்சிமாக்காளி,<br>அம்மன்கோவில் தெரு,<br>கழுநீர்குளம், ஆலங்குளம்.<br>4) ஜெயராணி வயது 35/22<br>த.பெ. வேல்முருகன்,<br>வடக்கு தெரு,<br>ராவுத்தர்பேரி, துப்பாகுடி. |
| அரசுதரப்பில் எதிரிகள் மீதான | | எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 341, |

| | | |
|---|---|---|
| குற்றச்சாட்டுகள் | | 294(பி), 307, 506(ii) – ன்படி குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| நீதிமன்றம் எதிரிகள் மீது வனைந்த குற்றச்சாட்டுகள் | : | 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி), 341, 294(பி), 307, 506(ii)–ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 341, 307, 506(2) – ன் கீழும், 4ம் எதிரி மீது இதச பிரிவு 120(பி) – ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் கூற்று | | குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் நிர்ணயம் | | 1 ம் எதிரி இதச பிரிவுகள் 120(பி), 294(பி), 341, 307, 506(ii) – ன் கீழும், 2, 3 எதிரிகள் இதச பிரிவுகள் 120(பி), 341, 307, 506(ii) – ன் கீழும், 4ம் எதிரி இதச பிரிவு 120(பி)– ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்றும், 1ம் எதிரி இதச பிரிவு 324–ன் கீழும், 2ம் எதிரி இதச பிரிவு 323 – ன் கீழும் குற்றவாளிகள் என்றும் தீர்மானிக்கப்படுகிறது. |
| தீர்ப்பு :– | : | முடிவாக, 1 ம் எதிரி மீதான இதச பிரிவுகள் 120(பி), 294(பி), 341, 307, 506(ii) –ன் படியான குற்றச்சாட்டுகளும், 2, 3 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 120(பி), 341, 307, 506(ii) – ன் படியான குற்றச்சாட்டுகளும், 4ம் எதிரி மீதான இதச பிரிவு 120(பி) – ன் படியான குற்றச்சாட்டும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே 1 முதல் 4 எதிரிகள் மேற்குறிப்பிட்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து, 1 ம் எதிரியை இதச பிரிவு 120(பி), 294(பி), 341, 307, 506(ii) – ன் படியான குற்றங்களிலிருந்தும், 2, 3 எதிரிகளை இதச பிரிவு 120(பி), 341, 307, 506(ii) |

| | | |
|---|---|---|
| | | – ன் படியான குற்றங்களிலிருந்தும் 4ம் எதிரி இதச பிரிவு 120(பி), ன் படியான குற்றத்திலிருந்தும் குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்தும், 1ம் எதிரி இதச பிரிவு 324–ன் படியும் மற்றும் 2ம் எதிரி இதச பிரிவு 323 ன் படியும் குற்றவாளி என அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே 1ம் எதிரி இதச பிரிவு 324 ன் படியும், 2ம் எதிரி இதச பிரிவு 323 ன் படியும் குற்றவாளிகள் என முடிவு செய்து வழக்கின் தன்மை, எதிரிகளின் வயது ஆகியவற்றை கருத்தில் கொண்டு 1 ம் எதிரி மீதான இதச பிரிவு 324 – ன்படியான குற்றத்திற்கு **அபராதம் ரூ.10,000/–** விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் **ஆறு மாதம் மெய்காவல்** சிறைதண்டனை விதித்தும், 2ம் எதிரி மீதான இதச பிரிவு 323– ன்படியான குற்றத்திற்கு **அபராதம் ரூ.1000/–** விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் **ஒரு மாதம் மெய்காவல்** சிறைதண்டனை விதித்தும், குவிமுச பிரிவு 235(ii) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. 1ம் **எதிரிக்கு மொத்த அபாராத்தொகை ரூ.10000/–. 2ம் எதிரிக்கு மொத்த அபாராத்தொகை ரூ.1000/–.**<br>இவ்வழக்கில் பிஆர் எண் 80/2024 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, சாபொ–1 ஆக குறியீடு |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டுள்ள அருவாள் ஒன்று. சாபொ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கம்பு ஒன்று ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், சாபொ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 49 H 1113 பதிவு எண் கொண்ட Toyato குவாலிஸ் கார் ஒன்று அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 776/2023, 27.01.2023 ம் தேதியிட்ட உத்தரவுபடி கண்ணன் த.பெ. கணபதி என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கானது அம்பாசமுத்திரம் கற்றறிந்த நீதித்துறை நடுவர் அவர்களால் 06.03.2023 அன்று முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.15/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பிறகு இவ்வழக்கு மேல் விசாரணைக்காக திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு இந்த வழக்கானது **அமர்வு வழக்கு எண்.749/2023** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அங்கிருந்து இவ்வழக்கானது அம்பாசமுத்திரம் உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு 06.10.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அங்கிருந்து இவ்வழக்கானது தென்காசி உதவி அமர்வு

நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு 27.02.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி மாவட்ட அமர்வு நீதிமன்ற A.No.104/2024 03.06.2024 தேதியிட்ட உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்று 18.07.2024 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு **23.10.2025** அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு. R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஸ்டாலின் குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (28.03.2026) இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

1. அரசுத்தரப்பில், புகார்தாரருக்கும் 4 ம் எதிரிக்கும் ஏற்பட்ட இடப்பிரச்சனை காரணமாக முன்விரோதம் கொண்டு புகார்தாரரை கொலை செய்ய வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு 4ம் எதிரி தனது நண்பர்களான 1 முதல் 3 வரையிலான எதிரிகளுடன் சேர்ந்து கூட்டுசதி செய்ததாகவும், கடந்த 19.09.2022 ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் சிவஞானபுரம் – இராவுத்தர்பேரி செல்லும் மெயின்ரோட்டில் இந்திரா நகரின் மேல்புறமுள்ள கேரளாக்காரர் தோட்டத்திற்கு அருகில் புகார்தாரர் தனது TN 69 Az 7749 என்ற பதிவெண் கொண்ட லோடு ஆட்டோவில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த போது 1 முதல் 3 வரையிலான எதிரிகள் சேர்ந்து TN 49 H 1113 என்ற பதிவெண் கொண்ட டொயோட்டோ குவாலிஸ் காரை கொண்டு புகார்தாரர் சென்ற லோடு ஆட்டோவை வழிமறித்து புகார்தாரர் லோடு ஆட்டோவின் கதவை திறந்து வெளியே வந்த போது 1ம் எதிரி புகார்தாரரை பார்த்து "செத்து ஒழி தேவிடியா மவனே" என்று பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியதாகவும்,

புகார்தாரரை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் தன் கையில் வைத்திருந்த அருவாளால் புகார்தாரரின் தலையை பார்த்து வெட்டிய போது புகார்தாரர் சுதாரித்துக் கொண்டு விலகியதால் வெட்டு புகார்தாரரின் இடது முழங்கையில் பட்டு இடது முழங்கையில் சாதாரண இரத்த காயம் ஏற்படுத்தியதாகவும், 1ம் எதிரி 2ம் எதிரியிடம் "அவனை கொல்லு" என்று சொல்லவும் 2ம் எதிரி தன் கையில் வைத்திருந்த கம்பால் "இத்தோடு சாவு" என்றும் "அருவாளை விடு" என்றும் சொல்லி புகார்தாரரை கொலை செய்யும் நோக்கத்தில் கம்பால் புகார்தாரரின் இடது தோள்பட்டையிலும் தலையின் வலது பக்கத்திலும் அடித்து புகார்தாரருக்கு சாதாரண இரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் மீண்டும் புகார்தாரர் எதிரிகளிடமிருந்து தப்பி செல்ல திமிரவும் 1ம் எதிரியும், 2ம் எதிரியும் சேர்ந்து 3ம் எதிரியிடம் "இவனைப்பிடி கொன்றுவிடலாம்" என சொல்லவும் 3ம் எதிரி 1ம் சாட்சியை பார்த்து "செத்துத்தொலை தேவிடியா மவனே" என கூறி கையால் கன்னத்தில் அடித்ததாகவும் எதிரிகள் அசா–1 ஐ கொலை செய்ய முயன்றதாகவும் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே எதிரிகள் இதச பிரிவுகள் 120(பி), 341, 294(பி), 307, 506(ii) –ன் படி குற்றம் புரிந்துள்ளதாக ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகளுக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலேயே வழக்கின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டு, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 307–ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக உள்ளதால் இந்த வழக்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) பிரிவின்படி அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றம் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில்

இருந்தமையால் 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி), 341, 294(பி), 307, 506(ii) – ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 341, 307, 506(ii) – கீழும், 4ம் எதிரி மீது இதச பிரிவு 120(பி) – ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தனர். எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் சாபொ–1 முதல் 3 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:–</u>

கடந்த 19.09.2022 ம் தேதி இரவு 08.00 மணிக்கு அசா–1 கண்ணப்பன் என்பவர் பாப்பாங்குளம் பலசரக்கு கடையிலிருந்து லோடு ஆட்டோவில் தனது பலசரக்கு கடைக்கு சாமான்கள் வாங்கிக் கொண்டு வந்து கொண்டிருந்துள்ளார். 1ம் எதிரி அண்ணாமலை சிமெண்ட் கலர் குவாலிஸ் காரில் குறுக்கே வந்து அசா–1 ஐ வழிமறித்து ஸ்பேனர் கேட்டுள்ளார். அசா–1 ஆட்டோவிற்கான ஸ்பேனர் தான் உள்ளது. காருக்கான ஸ்பேனர் இல்லை என்று கூறியுள்ளார். 1ம் எதிரி அருவாளுடன் ஓடி வந்து "தேவிடியா மவனே செத்து தொலைடா" என்று கூறி அசா–1 ன் தலையை நோக்கி வெட்ட வந்துள்ளார். அந்த வெட்டானது அசா–1 ன் இடது முழங்கை அருகில் பட்டுள்ளது. 2ம் எதிரி கண்ணன் அசா–1 ன் இடது பக்க தோள்பட்டையிலும், தலையிலும் கம்பால் அடித்துள்ளார். 3ம் எதிரி குமார் அசா–1 ஐ வலது கன்னத்தில் ஓங்கி அடித்துள்ளார். அசா–1 ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார்கள். அசா–1 நடந்த சம்பவம் குறித்து போலீசாரிடம் அசாஆ–1 புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

6. அசா.8 தலைமை காவலர் ஷெரிப் என்பவர் 20.09.2022 அன்று தீர்த்தபதி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில் மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அசா–1 மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அசா–1 கண்ணப்பன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று காவல் நிலையம் வந்து அதனடிப்படையில் காவல் நிலைய குற்ற எண்.183/2022 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 307, 506(ii) இதச ன் கீழ் அசா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

7. அசா–10 மருத்துவர் எப்சிபா டெபிலா என்பவர் கடந்த 19.09.2022 அன்று இரவு 10.15 மணிக்கு அசா–1 கண்ணப்பன் என்பவரை பரிசோதித்துள்ளார். அவருக்கு சிதைந்த காயம் 5 x 3 x 0.5 செமீ அளவில் இடது முழங்கை முடக்கு மூட்டு பக்கத்திலும் சிராய்ப்பு காயம் 7 x 0.5 செமீ அளவில் இடது தோள்பட்டையிலும் சிதைந்த காயம் 2 x 0.5 x 0.5 செமீ அளவில் இடது கை பெருவிரலிலும் சிதைந்த காயம் 2 x 0.5 x 0.5 செமீ அளவில் வலது பக்க தலை பகுதியிலும் இருந்துள்ளது. அசா–1 ஐ மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார். அங்கு கொடுக்கப்பட்ட சிகிச்சை விபரங்களின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட 1 முதல் 4 வரையிலான காயங்கள் சாதாரண காயங்கள் என அசாஆ–6 காயச்சான்று வழங்கியுள்ளார்.

8. இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அசா.11 காவல் ஆய்வாளர் சரவணன் என்பவர் 20.09.2022 ம் தேதி மாலை 06.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் அசா–6 லட்சுமணப்பெருமாள் மற்றும் சுப்பையா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அசாஆ–2 பார்வை மகஜர் மற்றும் அசா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், 26.09.2022 அன்று சுமார் 12.00 மணியளவில் வழக்கின் எதிரி அண்ணாமலை

என்பவரை ஆலங்குளம் – அம்பாசமுத்திரம் செல்லும் ரோட்டில் கடையம் ராம்நகர் விலக்கில் வைத்து கைது செய்துள்ளார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய அசாபொ–3 வாகனம் TN–49–H–1113 என்ற பதிவெண்ட உடைய டொயாட்டா குவாலிஷ் வாகனம் மற்றும் வாகனத்தில் இருந்த அசாபொ–1 அருவாள், அசாபொ–2 கம்பு ஆகியவற்றை அத்தாட்சி அசாஆ–4 மூலம் கைப்பற்றியுள்ளார். பின்னர், 27.09.2022 அன்று சுமார் 15.30 மணியளவில் வழக்கின் எதிரி ஜெயராணி என்பவரை பொட்டல்புதூர் – இடைக்கால் செல்லும் ரோட்டில் மயிலப்பபுரம் விலக்கில் உள்ள பஸ்ஸ்டாப் முன்பு வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான வேல்ச்சாமி என்ற எம்.எல்.ஏ கண்ணன், மாணிக்கம் என்ற முத்துக்குமார் ஆகியோர்களை 20.10.2022 ம் தேதி, பொட்டல்புதூர் – முக்கூடல் மெயின்ரோட்டில் வெள்ளிக்குளம் பஸ்ஸ்டாப் அருகில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர், 29.11.2022 அன்று இவ்வழக்கின் காயம்பட்ட புகார்தாரர் கண்ணப்பன் என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர்.கேப்சிபா டெல்பின் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று அசாஆ–6 பெற்றுள்ளார். பின்னர், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 341, 294(பி), 307, 506(ii)– ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

9. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின்படி வினவியபோது எதிரிகள் 'பொய் சாட்சி' என்று மறுத்துள்ளார். எதிரி தரப்பில், சாட்சிகள் 'இல்லை' என்று கூறியுள்ளார்.

<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்ன வென்றால்,</u>

10. அரசுத்தரப்பில், 1ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 120(பி), 341, 294(பி), 307, 506(ii) , 2, 3 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 120(பி), 341, 307, 506(ii), 4ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 120(பி) – ன் படியான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

<u>11) தீர்வு–</u>

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் எதிரிகள் அசா–1 கண்ணப்பன் என்பவரை கொலை செய்ய வேண்டும் என்று கூட்டு சதி செய்ததாகவும் அதனடிப்படையில் 1ம் எதிரி அசா–1 ஐ அருவாளால் தலையில் வெட்டியதாகவும் அந்த வெட்டு அசா–1 சுதாரித்து கொண்டதால் இடது முழங்கையில் பட்டு சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும் 2ம் எதிரி கம்பால் அசா–1 ன் இடது தோள்பட்டையிலும் தலையின் வலது பக்கத்திலும் அடித்து சாதாரண காயங்கள் ஏற்பட்டதாகவும் 3ம் எதிரி கையால் கனத்தில் அடித்ததாகவும் எதிரிகள் கொலை செய்ய முயற்சித்ததாகவும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் உள்ள அரசுத்தரப்பு வழக்கை ஒத்து அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளார்கள் எனவும் அசா–1 ற்கு ஏற்பட்ட காயத்தை பொறுத்து அசா–10 மருத்துவர் எப்சிபா என்பவர் சாட்சியம் அளித்துள்ளார் எனவும் அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

12. எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் அசா–1 கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ள புகார் மனுவில் எதிரிகளின் பெயர் குறிப்பிடவில்லை எனவும் இந்நிலையில் அசா–1 நீதிமன்றத்தில் எதிரிகளின் பெயர் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார் எனவும் அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் எதிரிகளின் பெயர் விவரங்களை குறிப்பிட்டு புகார் வாக்குமூலம்

கொடுத்ததாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார் எனவும் அசா–2 புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்துள்ள நிலையில் அசா–2 அதனை குறித்து சாட்சியம் அளிக்கவில்லை எனவும் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனு ஆறு நாட்கள் கழித்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் புலன் விசாரணை அதிகாரி அசா–1 ஐ விசாரிப்பதற்கு முன்பாகவே சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக கூறியுள்ளார் எனவும் சம்பவயிடத்தை குறித்து அசா–1 க்கு மட்டும் தெரிந்த நிலையில் புலன் விசாரணை அதிகாரி எவ்வாறு சம்பவயிடத்தை அடையாளம் கண்டுகொண்டார் என சந்தேகம் எழுகிறது எனவும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகளின் சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அமையவில்லை எனவும் இந்த வழக்கிற்கான முன்விரோதம் குறித்து நிரூபணம் செய்யபடவில்லை எனவும் எதிரிகள் அசா–1 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற சதி திட்டம் தீட்டியதாக அரசுத்தரப்பில் எந்த சாட்சியங்களும் இல்லை எனவும் இந்த வழக்கில் அடையாள அணி வகுப்பு நடத்தப்படவில்லை எனவும் சம்பவம் இரவு நேரமாக உள்ள நிலையில் எதிரிகளை எவ்வாறு அசா–1 அடையாளம் கண்டுகொண்டார் என அரசுத்தரப்பில் தெளிவுப்படுத்தப்படவில்லை எனவும் வழக்கு சம்பவத்திற்கு இரண்டு நாள்கள் முன்னர் அசா–1 ன் செல்போனில் இனம் தெரியாத நபர்கள் போன் செய்து வந்ததாக அசா–1 கூறியுள்ள நிலையில் அசா–1 ன் செல்போனை கைப்பற்றி புலன் விசாரணை அதிகாரி அது குறித்து நிரூபணம் செய்யப்படவில்லை எனவும் 3ம் எதிரியின் பெயர் வழக்கு ஆவணங்களில் முன்னுக்கு பின் முரணாக காணப்பட்டுள்ளது எனவும் மருத்துவரிடம் ஆயுதத்தை காண்பித்து விசாரணை செய்யப்படவில்லை எனவும் அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனபவும் எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

13. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. அரசுத்தரப்பில் அசா–1 க்கும் 4ம் எதிரிக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வந்ததாகவும் அந்த இடப்பிரச்சனை காரணமாக 1 முதல் 4 எதிரிகள் அசா–1 ஐ கொலை செய்ய வேண்டும் என சதி திட்டம் தீட்டியதாகவும் 19.09.2022 ம் தேதி காலை 8 மணியளவில் 1 முதுல் 3 எதிரிகள் டெயோட்டா குவாலிஸ் காரை கொண்டு அசா–1 சென்ற லோடு ஆட்டோவை வழிமறித்ததாகவும் 1ம் எதிரி அசா–1 ஐ பார்த்து "செத்துத்தொலை தேவிடியா மவனே" என்று பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியதாகவும் 1 முதல் 3 எதிரிகள் அசா–1 ஐ பார்த்து "புண்டாமவனை கொல்லாம விடாதீங்க" என்று கூறி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்பட்டு 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 341, 506(2), 120(பி) ன்படியான குற்றச்சாட்டுகளும், 2, 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 506(2), 120(பி) ன்படியான குற்றச்சாட்டுகளும், 4ம் எதிரி மீது இதச பிரிவு 120(பி) ன்படியான குற்றச்சாட்டும் வனையப்பட்டுள்ளது.

14. அரசுத்தரப்பில் அசா–1 ன் தங்கையான மரகதம் என்பவருக்கு 4ம் எதிரிக்கு சொந்தமான 6 செண்ட் இடத்தை அசா–1 ரூ. 31 ஆயிரத்திற்கு விலை பேசி வாங்கி கொடுத்ததாகவும் பின்னர் அசா–1 அந்த இடத்தை அளந்து பார்த்த போது 6 செண்ட்க்கு பதிலாக 4.40 செண்ட் இடம் மட்டுமே இருந்ததாகவும் அசா–1 4ம் எதிரியிடம் அதற்கான பணத்தை திரும்பதர கேட்டதினால் 4ம் எதிரி அசா–1 ன் மீது முன்விரோதம் கொண்டு அசா–1 ஐ கொலை செய்ய அவரது நண்பரான 1ம் எதிரியிடம் சொல்லியதாகவும் 1ம் எதிரி அவருடைய நண்பரான 2, 3 எதிரிகளிடம் சொல்லியதாகவும் அவ்வாறு 1 முதல் 4 எதிரிகள் அசா–1 ஐ கொலை செய்ய வேண்டும் என கூட்டு சதி செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

15. அசா–1 கண்ணப்பன் என்பவர் தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிகளுக்கும் தனக்கும் நிலப்பிரச்சனை உள்ளது என கூறியுள்ளார். குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தனக்கும் எதிரிகளுக்கும் நேரடியாக இடப்பிரச்சனை இல்லை எனவும் தன் தங்கைக்கும் எதிரிக்கும் தான்

இடப் பிரச்சனை எனவும் தன்னுடைய தங்கை மரகதம் வாங்கியதாக கூறப்படும் இடம் பொன்னுச்சாமி நாடார் இடம் என்றும் கூறியுள்ளார். 1 முதல் 4 எதிரிகள் அசா–1 ஐ கொலை செய்ய வேண்டும் என சதி திட்டம் தீட்டியதை கண்ணுற்றதாக அரசுத்தரப்பில் எந்த சாட்சியங்களும் இல்லை. இந்நிலையில் 1 முதல் 4 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 120(பி) ன்படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும் எனவே 1 முதல் 4 எதிரிகள் இதச பிரிவு 120(பி) ன்படி குற்றவாளி இல்லை எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரி "தேவிடியா மவனே செத்து தொலைடா" என கூறி தலையை நோக்கி அருவாளால் வெட்ட வந்ததாக கூறியுள்ளார். அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரி அசிங்கமான வார்த்தை பேசியதால் தனக்கோ இதர நபர்களுக்கோ அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாக எதுவும் கூறவில்லை. அரசுத்தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் குவாலிஸ் காரில் சென்று அசா–1 ஐ வழி மறித்ததாக கூறப்பட்டுள்ளது. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரி அண்ணாமலை குவாலிஸ் காரில் குறுக்கே வந்து தன்னை வழி மறித்து ஸ்பேனர் கேட்டதாக கூறியுள்ளார். எந்த எதிரி அசா–1 ஐ வழிமறித்தார் என்று அசா–1 ன் சாட்சியத்திற்கும் அரசுத்தரப்பு வழக்கிற்கும் முரண்பாடுகள் உள்ளது. 1 முதல் 3 எதிரிகள் அசா–1 ஐ பார்த்து "புண்டாமவனை கொல்லாம விடாதீங்க" என்று கூறி கொலை மிரட்டல் விடுத்ததாக அசா–1 மற்றும் இதர சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் 1 முதல் 3 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 341, 506(2) ன்படியான குற்றச்சாட்டுகளும், 1ம் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 294(பி) ன்படியான குற்றச்சாட்டும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும் எனவே 1 முதல் 3 எதிரிகள் இதச பிரிவுகள் 341, 506(2) – ன்படியும், 1ம் எதிரி இதச பிரிவு 294(பி) ன்படியும் குற்றவாளி இல்லை எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. அரசுதரப்பில் 19.09.2022ம் தேதி இரவு 8 மணியளவில் சிவஞானபுரம் – இராவுத்தர்பேரி செல்லும் மெயின் ரோட்டில் வைத்து 1ம் எதிரி அண்ணாமலை அருவாளால் அசா–1 ன் தலையை பார்த்து வெட்டியதாகவும் அசா–1 சுதாரித்துக் கொண்டு விலகியதால் அந்த வெட்டு அவரின் இடது முழங்கையில் பட்டு சாதாரண காயம் ஏற்பட்டதாகவும் 1ம் எதிரி அசா–1 ஐ வெட்டிய போது 1ம் எதிரி அருவாளை பிடித்து தடுத்ததால் அசா–1–ன் இடது பெருவிரலுக்கு இடையில் ரத்த காயம் ஏற்பட்டதாகவும் 1ம் எதிரி அண்ணாமலை 2ம் எதிரி வேல்சாமி (எ) கண்ணன் என்பவரிடம் "இவனை கொன்றுடலாம்" என்று சொல்லவும் 2ம் எதிரி "இத்தோடு செத்து தொல" என்று சொல்லி அசா–1 ன் இடது தோள்பட்டையிலும் தலையின் வலது பக்கத்திலும் அடித்து சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும் 1 ம் எதிரி அண்ணாமலை, 2ம் எதிரி வேல்சாமி (எ) கண்ணன் ஆகியோர்கள் 3ம் எதிரி மாணிக்கம் என்பவரிடம் "இவனை பிடி கொன்று விடலாம்" என்று சொல்லவும் 3ம் எதிரி அசா–1 பார்த்து "செத்து தொலை தேவிடியா மவனே" என கூறி கையால் கன்னத்தில் அடித்ததாகவும் 1 முதல் 3 எதிரிகள் அசா–1 ஐ கொலை செய்ய முயற்சி செய்ததாகவும் கூறப்பட்டு 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவு 307 ன் படி குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

18. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் 19.09.2022 ம் தேதி இரவு 8 மணியளவில் தான் லோடு ஆட்டோவில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வரும் போது இந்திரா நகர் மேல்புறம் கேரளாக்காரர் தோட்டத்திற்கு பக்கம் வந்த போது எதிரி அண்ணாமலை சிமெண்ட் கலர் குவாலிஸ் காரை குறுக்கே வந்து நிறுத்தி தன்னை வழி மறித்து தன்னிடம் ஸ்பேனர் கேட்டார் எனவும் தான் காருக்கு ஸ்பேனர் இல்லை என கூறியபோது எதிரி அண்ணாமலை அருவாளுடன் வந்து "தேவிடியா மவனே செத்து தொலைடா" என்று கூறி தன் தலையை நோக்கி வெட்ட வந்தார் எனவும் தான் சுதாரித்து விலகியதாகவும் அந்த வெட்டு தன்னுடைய இடது முழங்கை அருகே பட்டது எனவும் தான் அருவாளை பிடித்து கொண்டதாகவும் எதிரி கண்ணன் "தேவிடியா மவனே இதோடு செத்த" என்று

கூறி தன்னுடைய இடது பக்க தோள்பட்டையிலும், தலையிலும் கம்பால் அடித்தார் எனவும் எதிரி குமார் செத்து தொலைடா என்று கூறி கையில் வலது கனத்தில் ஓங்கி அடித்ததாகவும் கூறியுள்ளார்.

19. அரசுத்தரப்பில் ஏற்கனவே 4ம் எதிரியிடம் இருந்து அசா–1 ன் சகோதரி மரகதம் என்பவருக்கு அசா–1 ஆறு செண்ட் நிலம் வாங்கி கொடுத்ததாகவும் பின்னர் நிலத்தை அளந்து பார்த்த போது 4.40 செண்ட் இடம் மட்டும் இருந்ததால் அசா–1 4ம் எதிரியிடம் மீதம் உள்ள நிலத்திற்கான பணத்தை திரும்ப கேட்டதால் 4ம் எதிரி 1 முதல் 3 எதிரிகளுடன் சேர்ந்து அசா–1 ஐ கொலை செய்ய வேண்டும் என கூட்டு சதி செய்ததாகவும் அதனடிப்படையில் 1 முதல் 3 எதிரிகள் அசா–1 ஐ கொலை செய்ய முயன்றதாகவும் கூறப்பட்டுள்ளது. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் 4ம் எதிரிக்கும் தனக்கும் என்ன பிரச்சனை இருந்தது என்று கூறவில்லை. மேலும் 1 முதல் 3 எதிரிகள் சம்பவத்திற்கு முன்பே அசா–1 ற்கு அறிமுகமான நபர்கள் இல்லை அசா–1 ற்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை இருந்தது என்று அசா–1 சாட்சியம் அளிக்காத நிலையிலும் 1 முதல் 4 எதிரிகள் அசா–1 ஐ கொலை செய்ய வேண்டும் என கூட்டு சதி செய்ததாக அசா–1 சாட்சியம் அளிக்காத நிலையிலும் 1 முதல் 4 எதிரிகள் கூட்டு சதி செய்ததை கண்ணுற்றதாக அரசுத்தரப்பில் நேரடியான எந்த சாட்சியங்களும் இல்லாத நிலையில் 1 முதல் 3 எதிரிகளுக்கு அசா–1 ஐ சொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்ததாக கருத முடியாது.

20. அசா–1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அசா–10 தன்னுடைய சாட்சியத்தில் அசா–1 ன் இடது முழங்கை முடக்கு முட்டு பகுதியில் 5 x 3 x 0.5 செமீ அளவில் சிதைந்த காயமும் இடது தோள்பட்டையில் 7 x 0.5 செமீ சிராய்ப்பு காயமும் இடது கை பெருவிரலில் 2 x 0.5 x 0.5 செமீ அளவில் சிதைந்த காயமும் வலது பக்க தலை பகுதியில் 2 x 0.5 x 0.5 செமீ அளவில் சிதைந்த காயமும் இருந்ததாக கூறியுள்ளார். அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் 3ம் எதிரி குமார் தன்னுடைய கன்னத்தில் அடித்ததாக கூறியிருந்தாலும் அசா–1 ன் கன்னத்தில்

காயங்கள் எதுவும் பார்த்ததாக மருத்துவர் சாட்சியம் அளிக்கவில்லை. அசா–1 க்கு இடது முழங்கை மற்றும் தலை, தோள்பட்டையில் ஏற்பட்ட காயங்களை பொறுத்து அசா–1 ன் சாட்சியத்திற்கும் மருத்துவர் அசா–10 ன் சாட்சியத்திற்கும் முரண்பாடுகள் எதுவுமில்லை என அறிய முடிகிறது.

21. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ நடந்தவுடன் ஆம்புலன்ஸ் மூலம் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்ததாகவும் அங்கு வந்த போலீசாரிடம் அசாஆ–1 புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். சம்பவம் 19.09.2022 இரவு 8 மணிக்கு நடந்ததாக அசா–1 சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனு அசாஆ–1 மற்றும் முதல் தகவல் அறிக்கை அசாஆ–5 ஆகியவற்றிலும் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. 19.09.2022 அன்று இரவு 10.15 மணியளவில் அசா–1 மருத்துவமனைக்கு வந்ததாக மருத்துவர் அசா–10 சாட்சியம் அளித்துள்ளார். 20.09.2022 அன்று அரசு மருத்துவமனை சென்று அசா–1 டம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று 17.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக அசா–8 தலைமைக் காவலர் ஷெரிப் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். சம்பவம் நடந்து இரண்டு மணி நேரத்திற்குள்ளாக அசா–1 மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துள்ள நிலையிலும் மருத்துவமனையில் வைத்து அசா–1 டம் இருந்து புகார் வாக்குமூலம் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள நிலையிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததில் ஏற்பட்ட ஒரு நாள் காலதாமதம் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் சம்பவ நேரத்தை குறித்து அரசுத்தரப்பு வாக்கிற்கும் அசா–1 ன் சாட்சியத்திற்கும் முரண்பாடுகள் எதுவும் இல்லை எனவும் அறியமுடிகிறது.

22. புலன் விசாரணை அதிகாரி அசா–11 தன்னுடைய சாட்சியத்தில் 20.09.2022 அன்று மாலை 6 மணியளவில் சம்பவயிடம் சென்று பார்வை மகஜர் அசாஆ–2 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ–7 தயார் செய்ததாக கூறியுள்ளார். அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் இந்திரா நகர், கேரளகாரர் காட்டின் அருகில்

வைத்து சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார். புகார் வாக்குமூலம் அசாஆ–1 மற்றும் முதல் தகவல் அறிக்கை அசாஆ–5 ஆகியவற்றை பார்க்கும் போது "ராவுத்தரபேரி ரோட்டில் இந்திரா நகர் மேல்புறம் கேரளகாரர் தோட்டம் அருகே" சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. பார்வை மகஜர் அசாஆ–2, மாதிரி வரைபடம் அசாஆ–7 ஆகியவற்றை பார்க்கும் போது அதில் சம்பவயிடமாக சிவஞானபுரம்–இராவுத்தரபேரி ரோட்டில் காட்டப்பட்டுள்ளது. மேலும் அதற்கு அருகில் கேரளகாரர் விளாங்காடு கேரளா ஜீ.ஜீ. காலிமனை ஆகியவை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் சம்பவயிடத்தை குறித்து அசா–1 ன் சாட்சியத்திற்கும் அரசு தரப்பு வழக்கிற்கும் முரண்பாடுகள் எதுவும் இல்லை என அறியமுடிகிறது.

23. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரி அண்ணாமலை அருவாளால் தலையை நோக்கி வெட்ட வந்ததாகவும் அந்த வெட்டு தனது இடது முழங்கையில் பட்டதாகவும் தான் அந்த அருவாளை பிடித்து கொண்டதாகவும் எதிரி கண்ணன் தன்னுடைய இடது பக்க தோள்பட்டையிலும், தலையிலும் கம்பால் அடித்ததாகவும் கூறியுள்ளார். அசா–1 ன் இடது முழங்கை முட்டு பகுதியிலும், இடது தோள்பட்டையிலும், இடது கை பெருவிரலிலும், வலது பக்க தலை பகுதியிலும் சிதைந்த காயம் இருந்ததாக மருத்துவர் அசா–10 சாட்சியம் அளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரி அசா–11 தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரியிடமிருந்து அருவாள் மற்றும் கம்பு ஆகியவற்றை அத்தாட்சி சாட்சிகளான அசா–7 லட்சுமணன் மற்றும் சாட்சி ரமேஷ் கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் வைத்து கைப்பற்றியதாக கூறியுள்ளார். அசா–7 லட்சுமணன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று தனக்கு தெரியாது என கூறியிருந்தாலும் புலன் விசாரணை அதிகாரி அசா–11– ன் சாட்சியம் நம்பதகுந்ததாக உள்ளது சாபொ–1 அருவாள் அபாயகரமான ஆயுதம் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

24. எதிரிதரப்பில் 1 முதல் 3 எதிரிகள் அசா–1 ற்கு அறிமுகமான நபர்கள் இல்லை எனவும் புகாரில் எதிரிகளின் பெயர் குறிப்பிடவில்லை எனவும் இந்நிலையில் அசா–1 நீதிமன்றத்தில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளது நம்பும் படியாக இல்லை எனவும் கூறப்பட்டுள்ளது. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் தான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரிகளின் பெயர் குறிப்பிடப்பட்டதாக கூறியுள்ளார். அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் நீதிமன்றத்தில் ஆஜராக இருந்த எதிரிகளின் பெயர் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார். 1, 2 எதிரிகள் அசா–1 ஐ தாக்கியதாக அசா–1 கூறியுள்ள சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கை ஒத்து உள்ளது. 1 முதல் 3 எதிரிகளுக்கு அசா–1 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்ததாக அரசுத்தரப்பில் நிருபணம் செய்யப்படவில்லை. ஆனால் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களில் இருந்து 1ம் எதிரி அண்ணாமலை அருவாளால் அசா–1 ன் இடது முழங்கையில் தாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும் 2ம் எதிரி கம்பால் அசா–1 ன் இடது தோள்பட்டையிலும், வலது பக்க தலையிலும் அடித்து சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

25. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து அரசுத்தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் மீது சுமதப்பட்டுள்ள இதச பிரிவு 307 ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், 1ம் எதிரி அசா–1 ஐ அருவாளால் தாக்கி இடது முழங்கையில் சிறு காயம் ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரி கம்பால் அசா–1 ன் இடது தோள்பட்டையிலும், வலது பக்க தலையிலும் அடித்து சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும் அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே 1ம் எதிரி மீது இதச பிரிவு 324 ன் படியும், 2ம் எதிரி மீது இதச பிரிவு 323 ன்படியும் குற்றவாளி எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

26. 1ம் எதிரி இதச பிரிவு 324 –ன் படியும், 2ம் எதிரி இதச பிரிவு 323–ன் படியும் குற்றவாளிகள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து பிரிவு 235(ii) குவிமுசவின் கீழ் எதிரிகளிடம் தண்டனை குறித்து ஏதேனும் கூற விரும்புகிறிர்களா என வினவியபோது எதிரிகள் "இல்லை" என கூறினார்கள்.

27. முடிவாக, 1 ம் எதிரி மீதான இதச பிரிவுகள் 120(பி), 294(பி), 341, 307, 506(ii) –ன் படியான குற்றச்சாட்டுகளும், 2, 3 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 120(பி), 341, 307, 506(ii) – ன் படியான குற்றச்சாட்டுகளும், 4ம் எதிரி மீதான இதச பிரிவு 120(பி) – ன் படியான குற்றச்சாட்டும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே 1 முதல் 4 எதிரிகள் மேற்குறிப்பிட்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து, 1 ம் எதிரியை இதச பிரிவு 120(பி), 294(பி), 341, 307, 506(ii) – ன் படியான குற்றங்களிலிருந்தும், 2, 3 எதிரிகளை இதச பிரிவு 120(பி), 341, 307, 506(ii) – ன் படியான குற்றங்களிலிருந்தும் 4ம் எதிரி இதச பிரிவு 120(பி), ன் படியான குற்றத்திலிருந்தும் குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்தும், 1ம் எதிரி இதச பிரிவு 324–ன் படியும் மற்றும் 2ம் எதிரி இதச பிரிவு 323 ன் படியும் குற்றவாளி என அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே 1ம் எதிரி இதச பிரிவு 324 ன் படியும், 2ம் எதிரி இதச பிரிவு 323 ன் படியும் குற்றவாளிகள் என முடிவு செய்து வழக்கின் தன்மை, எதிரிகளின் வயது ஆகியவற்றை கருத்தில் கொண்டு 1 ம் எதிரி மீதான இதச பிரிவு 324 – ன்படியான குற்றத்திற்கு **அபராதம் ரூ.10,000/–** விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் **ஆறு மாதம் மெய்காவல்** சிறைதண்டனை விதித்தும், 2ம் எதிரி மீதான இதச பிரிவு 323– ன்படியான குற்றத்திற்கு **அபராதம் ரூ.1000/–** விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் **ஒரு மாதம் மெய்காவல்** சிறைதண்டனை விதித்தும், குவிமுச பிரிவு 235(ii) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. 1ம் **எதிரிக்கு மொத்த அபாராத்தொகை ரூ.10000/–. 2ம் எதிரிக்கு மொத்த அபாராத்தொகை ரூ.1000/–.**

28. இவ்வழக்கில் பிஆர் எண் 80/2024 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, சாபொ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அருவாள் ஒன்று. சாபொ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கம்பு ஒன்று ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், சாபொ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 49 H 1113 பதிவு எண் கொண்ட Toyato குவாலிஸ் கார் ஒன்று அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 776/2023, 27.01.2023 ம் தேதியிட்ட உத்தரவுபடி மனுதாரர் கண்ணன் த.பெ. கணபதி என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் ஆகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.08 17:51:39 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

அரசு தரப்பு சாட்சிகள் : –

| | | |
|---|---|---|
| அ.சா.1 | : | திரு. கண்ணப்பன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | : | திரு. வெட்டும் பெருமாள் |
| அ.சா.3 | : | திரு. ஆறுமுகக்கனி |
| அ.சா.4 | : | திரு. மரகதம் |
| அ.சா.5 | : | திரு. உஷாதேவி |
| அ.சா.6 | : | திரு. லெட்சுமணப்பெருமாள் |
| அ.சா.7 | : | திரு. லெட்சுமணன் |
| அ.சா.8 | : | திரு. ஷெரிப் |
| அ.சா.9 | : | திரு. ராஜீவ்காந்தி |

| | | |
|---|---|---|
| அ.சா.10 | : | மருத்துவர் எப்சிபா டெபிலா |
| அ.சா.11 | : | திரு. சரவணன் (காவல் ஆய்வாளர்) |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–

<u>எண்.68ன் கீழான நீதிமன்ற படிவம்</u>

| வ.எண் | ஆவணப்பட்டியல் மற்றும் தேதி | | ஆவணப் பட்டியல் குறியீடு செய்த நாள் | எப்படி குறியீடு செய்யப் பட்டது | யார் மூலம் குறியீடு செய்யப் பட்டது | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலம் | 20.09.2022 | 24.10.2024 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | பார்வை மகஜர் | 20.09.2022 | 17.12.2024 | அ.சா.ஆ.2 | அ.சா.6 | அசல் |
| 3. | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | 26.09.2022 | 07.01.2025 | அ.சா.ஆ.3 | அ.சா.7 | அசல் |
| 4. | அத்தாட்சி | 26.09.2022 | 07.01.2025 | அ.சா.ஆ.4 | அ.சா.7 | அசல் |
| 5. | முதல் தகவல் அறிக்கை | 20.09.2022 | 28.01.2025 | அ.சா.ஆ.5 | அ.சா.8 | அசல் |
| 6 | காயச்சான்றிதழ் | 19.09.2022 | 29.07.2025 | அ.சா.ஆ.6 | அ.சா.10 | அசல் |
| 7 | மாதிரி வரைபடம் | 20.09.2022 | 01.09.2025 | அ.சா.ஆ.7 | அ.சா.11 | அசல் |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:–</u>

| சான்று பொருள் எண் | ஆவணத்தின் / சாட்சிப் பொருளின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1 | அருவாள் ஒன்று (மொத்த நீளம் 50 1/2 செமீ. கைப்பிடி நீளம் 11.5செமீ இரும்பு பாகம் 39 செமீ.) | அசா–1 |
| 2 | கம்பு ஒன்று (சுமார் மொத்த நீளம் 101 செமீ) | அசா– 1 |
| 3 | TN 49 H 1113 பதிவு எண் கொண்ட Toyato குவாலிஸ் கார் ஒன்று. | அசா–11 |

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை

<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள்கள் :</u>– இல்லை

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.08 17:51:50 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்

தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தனர்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.